மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : வீடு கட்ட அனுமதி கொடுத்திருப்பது துறைமுகத்தில் அல்ல, துறை முகச் சாலையிலே.

திரு. வி. கே. கோதண்டராமன் : அனுமதி கோரி எந்த ஆண்டு விண்ணப்பித்தார்கள் ? எப்போது அனுமதி கொடுக்கப் பட்டது ? எந்த அடிப்படையில் உடனே கொடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அது ஒரு நீண்ட பட்டியல். அதைப் படித்தால் 15 நிமிடங்களாகும். விண்ணப் பித்த நாள் : 10—10—1977. அனுமதி கொடுத்த நாள் : 3—11—1977. 7—11—1977, 6—12—1977, 21—9—1977, 3—11—1977, 7—4—1978, 20—4—1978, முதலில் சொன்னவை கேட்ட நாட்கள், அடுத்தபடியாகச் சொன்னவை கொடுத்த நாட்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 431 432 ஆகியவை மாண்புமிகு அமைச்சரவர்களின் வேண்டுகோளுக் கிணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

கல்லணை விரிவாக்கக் கால்வாய்.

*வினா எண். 433—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கல்லணை விரிவாக்க கால்வாய் பகுதியை சீரமைக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உண்டா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இல்லை.

திரு. மு. அம்பிகாபதி : சோற்றாலும் மடை அடைக்கும் சோழ வள நாடு—அந்த நாட்டினுடைய விஷயம் இது. கல்லணை வாய்க்கால் சீரமைப்பு பற்றியும் மன்னார்குடி வாய்க்கால் பற்றி யும் விரிவாக்கம் பற்றியும் அரசின் பரிசீலனையில் இல்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதை விரிவாக்கம் செய்யாவிட்டால், தஞ்சை மாவட்டத்தில் நெல் பயிரிட முடி யாது. ஆகவே இதை மீண்டும் மறுபரிசீலனை செய்ய அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதை அன்போடு வினவி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, சோழவளநாடு சோறுடைத்து என்ற முதுமொழி இந்த அரசுக்கும் தெரியும். கல்லணை வாய்க்கால் விரிவாக்கத் திட்டம் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட் டார்கள். காவேரி மேட்டூர் விரிவாக்கத் திட்டத்தின் மூலம்

1979 மார்ச் 16]

பயன்படுகின்ற நிலத்தின் அளவு 2 இலட்சத்து 56 ஆயிரத்து 133 ஏக்கர், 18 சென்ட். இந்தக் கல்லணை வாய்க்கால் பாசனத் திட்டத்தின் மூலமாக பாசனம் பெறுவது 29 ஆயிரத்து 335 ஏக்கர், 59 சென்ட். இந்த நிலையில் மேலும் கால்வாய் சீரமைப்புத் திட்டம் எதுவும் இந்த அரசின் பரிசீலனையில் இல்லை என்று தெரிவித்தேன். என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மேலான யோசனை கவனிக்கப்படும்.

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி தாலூகா, பட்டுக்கோட்டை தாலூகா இந்த இரண்டு தாலூகாக்களிலுமுள்ள மிக அற்புதமான நிலங்களில் விளைச்சல் பாதிக்கப்படக்கூடிய அளவுக்கு சரியாக தண்ணீர் பாசனம் கிடைப்பதில்லை. ஆகவே, அரசாங்கம் இதில் தீவிரமாக கவனம் செலுத்தி தொடர்ந்து பாசன வசதிகள் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க துரித கவனம் செலுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாயவரம், பட்டுக்கோட்டை தாலூகாக்களில் பாசன வசதியை அதிகரிப்பதற்கு இந்த அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, வடவாறு எக்ஸ்டன்ஷன் பாசன வசதி பிரச்னை பெரிய தலைவலியாக இருந்து கொண்டிருக்கிறது. அந்த வாய்க்காலில் இன்னும் 100 க்யூசெக்ஸ் அதிகமாக தண்ணீர் விட்டால் போதும். இப்போதுள்ள நிலைமையில் அந்த வாய்க்காலின் அகலத்தை மேலும் அகலப்படுத்த—எம்பேங்க்மெண்ட் ஆக இருப்பதால் செய்ய முடியாது. ஆகவே இந்த வாய்க்காலை உயரப்படுத்திக் கொடுக்க முடியும் என்றால் இந்த தண்ணீர் விட முடியும் என்று சொல்லுகிறார்கள். இதற்கு பத்து அல்லது பதினைந்து லட்சம் ரூபாய் தான் செலவு ஏற்படும். ஆகவே இதிலுள்ள ஆயக்கட்டுகள் பலன்பெறக் கூடிய அளவில் இன்னும் 100 க்யூசெக்ஸ் தண்ணீர் அதிகமாக விடுவதற்கான வகையில் வாய்க்காலை செப்பனிடும் முயற்சியை அரசாங்கம் எடுக்குமா என்பதை கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இந்த வாய்க்காலின் கொள்ளளவு குறைவாக இருக்கிறது. மேலும் இதில் அடிக்கடி தண்ணீர் போய்க்கொண்டிருப்பதால் மண் மேடிட்டு கொள்ளளவு குறைந்திருப்பதால் விவசாயிகளுக்கு போதுமான தண்ணீர் கிடைப்பதில்லை. மேலும் அந்த வாய்க்காலை அகலப்படுத்துவது என்பதும் இயலாத நிலையில் இருக்கிறது. ஆகவே

இதை உயர்த்துவதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. எந்தெந்த தாலூக்காக்களில் எல்லாம் இது போன்ற நிலைமைகள் உருவாகியிருக்கிறதோ அந்தந்த தாலூக்காக்களில் வாய்க்கால்களை விரிவாக்குவதற்கு இந்த அரசு பரிசீலனை செய்து கொண்டுடிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரை கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, இந்த கல்லணை வாய்க்காலை விரிவாக்க வேண்டும் என்று சொல்லுகின்ற நேரத்தில் இதிலிருந்து செல்லுகின்ற பிராஞ்சு வாய்க்கால்களில்—அதுவும் குறிப்பாக டெயில்என்ட்-களில் தண்ணீர் சரியாக போவதில்லை. ஆகவே இப்படிப்பட்ட சிறிய வாய்க்கால்களில் லைனிங் கட்டிக் கொடுத்தால் அவர்களுக்கும் தண்ணீர் கிடைக்கும், இதை செய்து கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி நதி நீர்த் திட்டத்தில் 'லைனிங்' செய்ய வேண்டும் என்றால், இந்த சீரமைப்புத் திட்டத்திற்காக சுமார் 300 கோடி ரூபாய் செலவாகும். மேலும் இந்த காவேரி நீர் பிரச்சினை இன்னும் தீராதப் பிரச்சினையாக—இன்னும் முடிவு காணாத பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. இதையும் கருத்தில் கொண்டு காவேரி நீர் பிரச்சினையில் சீரமைப்பு ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பையும் அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. பொதுவாக இப்படிப்பட்ட கால் வாய்களில் மேல் அளவுக்கு (பிம் அளவுக்கு) தண்ணீர் விட்டாலும் கடைமடையில் இருப்பவர்களுக்குத் தண்ணீர் கிடைப்பதில்லை என்கின்ற குறைபாடு எல்லா பகுதிகளிலும் இருந்து கொண்டிருக்கிறது. இதையெல்லாம் சீர்படுத்துவதற்கு விரிவான முறையில் இந்த அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

[முற்பகல் 9-50]

திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கல்லணையைப் பொறுத்த ஆறுகளில் சரியாக தூர் எடுக்காத காரணத்தால், அந்த ஆறுகளும், கரைகளும் ஒரே அளவுக்கு மேடிட்டு இருக்கிறது. ஆகவே, தண்ணீர் விடுகின்ற நேரத்திலே அதிகமாக உடைப்பு ஏற்படுகின்ற காரணத்தால், இதைப் போக்குவதற்கு இந்த அரசு விரிவான, சரியான ஒரு திட்டத்தைக் கொண்டு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே என்னுடைய பதிலில் விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். கல்லணையை அகலப்படுத்த முடியுமா

1979 மார்ச் 16]

என்பதுதான் மூலக் கேள்வி. ஆனால் இன்றைக்கு கல்லணையை அகலப்படுத்த முடியாத சூழ்நிலைக்கு இந்த அரசு தள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே, அதை உயரப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

புண்ணாக்கு பருத்திக்கொட்டைக்கான விலைகள்.

* வினா எண். 434—திரு. கா. சுப்ரவேலு : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புண்ணாக்கு, பருத்திக்கொட்டை இவைகளின் விலைகளை அரசு நிர்ணயம் செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இல்லை.

திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புண்ணாக்கு, பருத்திக் கொட்டையின் விலை உயர்ந்து விட்டது. புண்ணாக்கு, பருத்திக் கொட்டையைத் தீவனமாக நம்பியிருக்கின்ற கால்நடைகளுக்கு, ஏழைகள் இவைகளை வாங்க முடியாத அளவுக்கு விலை ஏறிவிட்டதால், இதன் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கு இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களை, மூலக் கேள்வி புண்ணாக்கு, பருத்திக் கொட்டை விலைகளை அரசு நிர்ணயம் செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா என்பது. இதை மாண்புமிகு உறுப்பினர் சுப்ரவேலு கேட்டிருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்த அளவிலே, இந்த விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கு உண்டான எந்தவிதமான விதிமுறைகளும் இப்போது இல்லை. உணவுத் துறையைக் கேட்டோம்; கால்நடை பராமரிப்புத் துறையை இது சம்பந்தமாக ஏதாவது குறிப்பு இருக்கின்றதா என்று கேட்டோம். அவர்களும் இல்லை என்று சொன்னார்கள். ஆனாலும், இன்று மைய அரசிலே 'அக்ரிகல்சுரல் பிரைசஸ் கமிஷன் ஆப் தி கன்ட்ரோல் ஆப் இந்தியா' என்ற நிறுவனத்தின் மூலமாகத் தான் பருத்திக் கொட்டை, பஞ்சு போன்ற விலைகளையெல்லாம் நிர்ணயித்து வருகின்றார்கள். என்னிடத்திலே இருக்கின்ற குறிப்புகள் எல்லாம், இன்று புள்ளிவிவரத் துறை ஆணையாளர் அவர்கள் வெளி மார்க்கட்டிலே புண்ணாக்கு என்ன விலை, பருத்திக் கொட்டை என்ன விலை என்ற பட்டியல் இருக்கின்றதே தவிர, இந்த அரசு புண்ணாக்கு, பருத்திக்கொட்டை போன்றவைகளுக்கு விலை நிர்ணயம் செய்யக் கூடிய நிலைமையிலே இல்லை.